

**தலையங்கம்**

# வாழிய செந்தமிழ் !

'செம்மையே ஆய சிவபதம்' என்கின்றார் திருவாசகம் எழுதிய மாணிக்கவாசகர். இங்கே செம்மை என்பது முக்தி நிலையைக் குறிக்கும். இதனை இன்னொரு பாடலாலும் உறுதிப்படுத்துகிறது திருவாசகம். 'செம்மை நெறி அறியாத சிதடரோடும் திரிவேனை மும்மை மலம் அறுவித்து...' இந்தப் பாடலிலும் 'செம்மை நலம்' என்ற வார்த்தைகள் இறவாத நெறி அளிக்கும் முக்தி இன்பத்தையே காட்டுகின்றது.

செம்மை என்பதற்கான பொருள் இறைவன் என்றும், அவன் அருளுகின்ற முக்தி நிலை என்றும் சமய இலக்கியங்கள் உறுதிப்படுத்துகின்றன. அந்த செம்மைத் தகுதி தமிழுக்கும் உண்டென்பதை நிரூபிக்கின்றது, தற்போது கோவையில் நடந்து கொண்டிருக்கும் செம்மொழி மாநாடு.

தமிழுக்கு என்றும் இறவா தன்மையும் இறவா புகழும் உண்டென்பதை உலகில் எவரும் மறுத்திட இயலாது.

மணிபிரவாள நடையிலிருந்த தமிழின் உரைநலத்தை துள்ளல் ஓசை உடையதாகவும் எல்லோரும் ரசிக்கும்படியாகவும் அனைவராலும் ஏற்றுக் கொள்ளும்படியாகவும் மாற்றிய பெருமையில் முக்கியமான இடம் திராவிட இயக்கங்களுக்கும் நிச்சயம் உண்டு.

குறிப்பாக பேரறிஞர் அண்ணா தனது எழுத்தாற்றலாலும், பேச்சாற்றலாலும், பரந்த அறிவாலும் தமிழகத்தையே தன்வயப்படுத்திக் கொண்டதின் விளைவுதான் இன்றுவரை தமிழகத்தில் திராவிடக் கட்சிகளின் ஆதிக்கமே மேலோங்கி நின்கின்றது. இந்த உண்மையை உணர்ந்திருப்பதால்தான் புதிதாக தோன்றும் கட்சிகளும்கூட 'திராவிட' என்ற சொல்லை தங்களை கட்சியின் பெயரோடு சேர்க்கின்றனர். அந்த அளவுக்கு மிகப்பெரும் தாக்கத்தை தமிழகத்தில் உருவாக்கிய பெருமகனார் முன்னாள் முதல்வர் பேரறிஞர் அண்ணா என்பதில் எவருக்கும் ஐயப்பாடு இருக்க வழியில்லை.

திராவிட இயக்கங்களுக்கு முன்னோடியாக பல சான்றோர் தமிழை செம்மைப்படுத்தி உள்ளனர் என்பதையும் இந்நேரத்தில் மறுப்பதற்கில்லை. அண்ணாவின் வழித் தோன்றலான தமிழக முதல்வர் கலைஞருடைய பேச்சாற்றலும் எழுத்தாற்றலும் இணையற்றவை என்பதனை அவரது அரசியல் எதிரிகள்கூட மறைமுகமாக ஒப்புக் கொள்வார்கள். குறிப்பாக, கலைத் துறையில் மோனை நயத்தோடு அந்நாளிலும் இந்நாளிலும் தமிழக முதல்வர் எழுதிய வசனங்கள் இன்று வரை பல உரை நடை ஆசிரியர்களுக்கு வழிகாட்டியாகத் திகழ்கின்றது. அவ்வகையில் இன்றும் முதுமையின் சுவடுகூட காட்டாது முத்தமிழ் இன்பத்தை பருகுபவரும், அதன் பெருமைகளை பரப்புபவருமான முதல்வரின் ஆட்சிக் காலத்தில் நடைபெறுகின்ற இந்தச் செம்மொழி மாநாடு, தமிழ் மொழியின் வரலாற்றில் பேரிடம் பெறும். இதன் எதிரொலியாக இன்றைய இளம் தலைமுறையினரும் தமிழின் மேன்மைகளை உணர்ந்துகொண்டு, தமிழின் இலக்கிய செழுமையையும் புரிந்து கொண்டு, 'நாம் தமிழர்' என்ற பெருமையை அடையக்கூடிய சூழ்நிலை உருவாகுமானால் அதுவே இந்த மாநாட்டுக்கு கிடைக்கின்ற முதல் வெற்றியாகும்!

**– ஆர். சிவகுமார்**